**செ. கு. எண்**:360 **நாள்**:09.10.12

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 9.10.2012

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி **1952** ஆம் ஆண்டு அமைக்கப் பெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை **2012** ஆம் ஆண்டு **60** ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளதையடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா வெகு விமரிசையாக விரைவில் நடைபெறவுள்ளது.

இதன் தொடக்கமாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நிகழ்ச்சியினை என்றென்றும் மக்கள் நினைவு கொள்ளும் வகையில், சென்னை, ராஜாஜி சாலையில் உள்ள போர் நினைவுச் சின்னத்திற்கும் தலைமைச் செயலகத்திற்கும் இடையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவினை அமைத்திட நான் உத்தரவிட்டுள்ளேன். சரித்திரப் புகழ் மற்றும் பாரம்பரியம் வாய்ந்த புனித ஜார்ஜ் கோட்டையின் பொலிவிற்கு பொருந்துமாறு கம்பீரமான தோற்றத்துடன் இந்த வளைவு வடிவமைக்கப்படும்.

புதிதாக கட்டப்படவிருக்கும் இந்த நினைவு வளைவு, **80** அடி அகலமும், **41** அடி உயரமும் கொண்டதாக இருப்பதுடன், பெருமை வாய்ந்த புனித ஜார்ஜ் கோட்டை மற்றும் போர் நினைவுச் சின்னம் அமைந்துள்ள இடத்திற்கு பொருத்தமாகவும், பாரம்பரியம் மற்றும் நவீன கட்டடக்கலை நுட்பத்திறனை உள்ளடக்கியும் கட்டப்படும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**